1968 ஆகஸ்ட் 24]

மதுரை சிறப்பங்காடியில் உணவுப் பொட்டலங்கள் விற்பனை:

***135 வினு—திரு. கரு. சீமைச்சாமி :** மாண்புமிகு சட்ட—கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை சூபர் மார்க்கெட்டில் உணவுப் பொட்டலங்கள் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருப்பது உண்மையா ?

(இ) ஆம் என்ருல், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) 1967-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17-ம் தேதி முதல் தினந்தோறும் தயிர்சாதமும், சாம்பார் சாதமும், சில தினங்களில் தேங்காய் சாதம், வெண்பொங்கல், எலுமிச்சம்பழ சாதம், புளியோதரை, வெஜடபிள் பிரியாணியும் பொட்டலம் ஒன்று 25 பைசா வீதம் விற்கப்படுகின்றன.

திரு. என். எஸ். வி. சித்தன் : இப்படிப்பட்ட உணவுப் பொட்டலங்கள் விற்பதால் சிறப்பங்காடிக்கு லாபம் கிடைத்திருக்கிறதா ? அப்படி லாபம் கிடைத்திருக்கிறதென்ருல் அதை ஏனைய சிறப்பங்காடிகளுக்கும் விஸ்தரிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எல்லா சூப்பர் மார்க்கெட்டிலும் இதுபோன்ற முறை இருக்கலாமா என்பது அவர்கள் அப்போதைக்கப்போது தேவை ஏற்படுவதை உத்தேசித்து முடிவு செய்கிருர்கள்.

திரு. கரு. இராம. கரியமாணிக்கம் அம்பலம் : இந்த உணவுப் பொட்டலங்களின் விலை என்னவென்று அறிவிக்கலாமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : 25 காசு என்று சொன்னேன்.

திரு. செ. பாலசுப்பிரமணியன் : இந்தமாதிரி ருசியான சாதனங்களை மலிவு விலையில் தயார் செய்து சட்டசபையாளர்களுக்கு சட்டசபை நடக்கும் காலத்தில் கொடுக்க கூட்டுறவுத் துறையில் ஏற்பாடு செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சட்டசபை உறுப்பினர்கள் எல்லோரும் சேர்ந்து ஒரு கூட்டுறவு அமைப்பு ஏற்படுத்தி அந்தக் கூட்டுறவு அமைப்பின்மூலம் ஒரு சிறந்த உணவு விடுதி நடத்த வேண்டுமென்று நீண்ட நாட்களாக ஒரு கோரிக்கை இருந்து வருகிறது. இன்றைய சட்டசபை அங்கத்தினர்களாவது அந்த முயற்சியை ஏற்க முன்வந்தால் இந்த அரசு ஆவன செய்யும்.

திரு. எம். எஸ். மணி : திருச்சியில் உள்ள சிறப்பங்காடியில் கடந்த ஒரு ஆண்டாக இப்படிப்பட்ட உணவுப் பொட்டலங்கள் நல்ல முறையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அதில் லாபமும் வந்திருக்கிறது என்பதை அரசு உணருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அங்கத்தினர் அதில் முயற்சி எடுத்துக்கொண்டிருப்பார் என்று தெரிகிறது.

திரு. கே. பி. எஸ். மணி : கூட்டுறவு முறையில் செய்யலாம் என்று அமைச்சர் அவர்கள் பதில் சொன்ஞர்கள். கடந்த கால அரசு காலத்தில் அங்கத்தினர்கள் எல்லாம் சேர்ந்து ஒரு கூட்டுறவு உணவுச்சாலையை ஏற்படுத்தி மூன்று மாத காலம் அதை நடத்தி, பின்னர் வாங்கியிருந்த வெஸல்களை எல்லாம் விற்றுவிட்டு 6,000 ரூபாய் கடனில் போனது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அம்மாதிரி நிலை வரும் என்பதால் அப்படிப்பட்ட முயற்சியில் ஈடுபடாமல் இருப்பது நல்லது என்பதை யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நான் எதிர்க்கட்சியில் இருந்தபோது சரியான சாப்பாடு கிடைக்கவில்லை என்று அன்றைய சபை துணைத் தலைவர் அவர்களிடம் விவாதித்தேன். அவர்கள் இந்தத் தகவலைச் சென்ஞர்கள். கூட்டுறவு முறையில் நடத்தியது சரிவர வரவில்லை என்று. ஒருமுறை

ரிவர வரவில்லை என்பதற்காக எப்போதுமே அப்படித்தான் இருக்கும் என்பதில்லை. கனம் உறுப்பினர் அவர்கள் முன் நின்று நடத்தினல் மிக நல்ல முறையில் நடக்கும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது.

உர விற்பனை கூட்டுறவு கிடங்குகளில் சோதனை

*136 வினு.—**திரு. சு. துரைசாமி:** மாண்புமிகு சட்ட-கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர், திருப்பூர் பஞ்சாயத்து யூனியனுக்கு உட்பட்ட பகுதியில் உள்ள கூட்டுறவு உர விநியோகம் செய்யப்படும் ஸ்டோர்களில் 1967-ம் வருடம் ஜனவரி மாதம் 1-ம் தேதிக்குப் பின்னர் 1967-ம் வருடம் ஜூன் மாதம் 15-ம் தேதி முடிய சோதனைகள் (Inspections) நடந்துள்ளனவா ?

(இ) ஆம் எனில், எத்தனை முறை ?

(உ) இந்த சோதனைகளின் போது கண்டுபிடிக்கப்பட்ட குறைபாடுகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) ஒரு முறை.

(உ) கோயம்புத்தூர் மாவட்ட அதிகாரி (கலெக்டர்) கூட்டுறவுச் சங்கங்களில் கண்டுபிடிக்கப்பட்ட தவறுதல்களுக்கு விளக்கம் கேட்டதோடு, 1967-ம் வருடம் ஜூன் மாதம் 16-ம் தேதி முதல் அச்சங்கங்களுக்கு உரம் வழங்குதலையும் நிறுத்தினூர். சங்கங்கள் விளக்கங்களைக் கொடுத்தன. திருப்பூர் கூட்டுறவுச் சங்க உதவிப் பதிவாளரின் வேண்டுகோளின்படி, சங்கங்கள் கடுமையாக எச்சரிக்கப்பட்டன. பிறகு, உரவிநியோகப் பொறுப்பும் சங்கங்களுக்குத் திருப்பி அளிக்கப்பட்டது.

திரு. சு. துரைசாமி : அந்த உர விநியோகம் செய்தவர்கள் தொடர்ந்து இதற்கு முன்னுல் இப்படிப்பட்ட தவறுகளை செய்திருக்கிறூர்கள். அப்படி தொடர்ந்து தவறு செய்யக்கூடியவர்களுக்கு நாம் அனுமதி வழங்காமல் இருப்பது நன்ருகயிருக்கும் என்பதை உணர்ந்து அதில் தகுந்த நடவடிக்கைகள் எடுக்க அரசாங்கம் முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நடவடிக்கைகள் எடுத்து, எச்சரிக்கை செய்யப்பட்டு முதலில் நிறுத்தப்பட்டது. மீண்டும், அவர்கள் நல்லமுறையில் நடத்துவார்கள் என்ற எண்ணம் அங்குள்ள மாவட்ட ஆட்சித் தலைவருக்கு ஏற்பட்டிருக்கிறது. தொடர்ந்து மாவட்ட ஆட்சித் தலைவர் பரிசீலித்து தேவையானுல் ரத்து செய்வார்.

நிதி ஒதுக்கம்.

*121 வினு.—**திரு. ரா. ரா. முனுசாமி :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சர்க்கார், மாவட்டங்களுக்கு சில நிதிகளைப் பிரித்துக் கொடுக்கும் போது (குறிப்பாக கல்விக்கும், விவசாயக் கடன், விவசாய முன்னேற்றம் முதலியன) அவைகள் எந்த அடிப்படையில் பிரித்துக் கொடுக்கப்படுகின்றன ?

(இ) ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சமமாக பங்கிட்டுத்தரும் உத்தேசம் உண்டா ?

THE HON. THIRU C. N. ANNADURAI: (*a*) Government normally allocate funds only on a Statewide basis. The distribution of such funds among the various districts is done by the Chief Controlling Officers, who are generally the Heads of Departments with reference to the requirements of programmes actually under execution.

(*b*) No Sir.